எங்கே சென்றாலும் காணலாம்
எங்கள் தவதிரு ஞானனை
எங்கும் அவன் புகழ் பாடலாம்
தேவன் நின்னருள் என்றும் வேண்டியே

சித்தர் சித்தலிங்க மடத்திலா
மோனம் தரும் தபோவனத்திலா
அத்தனருள் பெற்றோர் வீட்டிலா
அன்பர்கள் இதயக்கூட்டிலா

பினாகினி நதிக்கரையிலா
பிருந்தாவனத்துரை அருகிலா
பக்தர்கள் கூவிடும் அழைப்பிலா
பாடுமவன் அருட் பாடலிலா

ஞானப்பெரும் சுடர் வீசிடும் எங்கள்
ஞானன் புகழ் சொல்ல தரமாமோ
தேவா என்ற சொல்லே போதுமே நம்
பாபமெல்லாம் அதில் தீருமே